DINATHANTHI

14 AUG 2021

PAGE 4

முதுகலை, ஆராய்ச்சி படிப்பில் சேர

# விண்ணப்பிக்கும் கால அவகாசம் நீட்டிப்பு

புதுச்சேரி, ஆக.14-

புதுவை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு பிரிவு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

புதுவை பல்கலைக்கழகத்தின் 2021-22 கல்வி ஆண்டிற்கான பல்வேறு முதுகலை, ஒருங்கிணைந்த முதுகலை மற்றும் ஆராய்ச்சி படிப்பிற்கான சேர்க்கைக்கு இணையவழியில் விண்ணப்பிக்கும் தேதி வருகிற 20-ந்தேதி வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த படிப்புகளுக்கான நுழைவுத்தேர்வுகள் செப்டம்பர் 2, 3, 4-ந் தேதிகளில் நடைபெறும்.

இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DINATHANTHI

14 AUG 2021

PAGE 4

# பல்கலைக்கழக பேராசிரியருக்கு சிறந்த அறிவியலறிஞர் விருது

புதுச்சேரி, ஆக.14-

புதுவை பல்கலைக்கழக பேராசிரியர் திருப்பதி ராவ் பாடியின் கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப திறன்களை பாராட்டி வி.டி.குட் பன்னாட்டு தொழில்நுட்ப கல்வி நிறுவனம் 2020-ம் ஆண்டிற்கான சிறந்த அறிவியலறிஞர் விருதை வழங்கி கவுரவித்துள்ளது. பேராசிரியர் திருப்பதி ராவ் பாடி கணித உயிரியல் துறையில் பல்வேறு பன்னாட்டு அளவிலான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டவர். பல்வேறு கருத்தரங்குகளில் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரைகளை வழங்கியுள்ளார்.

விருதினை பெற்ற பேராசிரியர் திருப்பதி ராவ் பாடி புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங்கை சந்தித்து வாழ்த்து பெற்றார். தொடர்ந்து அவருக்கு பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர்.

DINAMALAR
14 AUG 2021
PAGE 14

# 'பிட் இந்தியா' விடுதலை ஓட்டம்

புதுச்சேரி, ஆக. 14–

பள்ளிக்கல்வி துறை சார்பில் நடந்த 'பிட் இந்தியா விடுதலை 2.0' ஓட்டத்தை அமைச்சர்கள் துவக்கி வைத்தனர்.

இந்தியாவின் 75வது சுதந்திர நாளை முன்னிட்டு, பள்ளிக் கல்வி இயக்குநரகம் சார்பில், 'பிட் இந்தியா விடுதலை ஓட்டம் 2.0' நேற்று காலை நடைபெற்றது.

புதுச்சேரி கடற்கரை சாலை, காந்தி திடலில் நடைபெற்ற ஓட்டத்தை அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமிநாராயணன் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். நிகழ்ச்சியில் கல்வித்துறை இயக்குனர் ருத்ரகவுடு மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதில் 75க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்.

இதேபோன்று, புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் விளையாட்டு இயக்குனரகம் மற்றும் உடற்கல்வி துறை சார்பில் நடந்த சுதந்திர தின விழிப்புணர்வு ஓட்டத்தை துணை வேந்தர் குர்மீத் சிங் துவக்கி வைத்தார்.

DINAMALAR
14 AUG 2021
PAGE 4

# புதுச்சேரி பல்கலை., நுழைவு தேர்வுக்கு விண்ணப்பிக்க காலக்கெடு நீட்டிப்பு

**புதுச்சேரி, ஆக. 14–**

புதுச்சேரி பல்கலைக் கழக நுழைவு தேர்வுக்கு 20ம் தேதி வரை விண்ணப்பிக்க காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் எம்.பி.ஏ., எம்.சி.ஏ., எம்.டெக்., பி.எச்.டி., படிப்புகளும் பல்வேறு பிரிவுகளில் டிப்ளமோ படிப்புகளும் நடத்தப்படுகிறது. இங்கு 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர்.

வரும் 2021–22 கல்வியாண்டிற்கான பல்கலைக் கழக நுழைவு தேர்வு செப்டம்பர் 2, 3, மற்றும் 4ம் தேதி என மூன்று நாட்களுக்கு இந்தியா முழுவதும் 38 நகரங்களில் ஆன்–லைனில் நடக்கிறது.

இதற்கான விண்ணப்பங்கள் புதுச்சேரி பல்கலைக் கழக இணைய தளத்தில் ஜூலை மாதம் 19ம்தேதி முதல் வரவேற்கப்பட்டு வருகிறது. முன்பு ஆன்–லைனில் விண்ணப்பிக்க ஆகஸ்ட் 14ம் தேதி வரை கடைசி தேதியாக குறிப்பிட்டிருந்தது.

மாணவர்களின்வேண்டுகோளுக்கு இணங்க விண்ணப்பிக்கும் தேதி வரும் 20ம் தேதி வரை நீட்டித்து பல்கலைக் கழக நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

நுழைவு தேர்வு கட்டணத்தை ஆன் லைனில் செலுத்தலாம். பி.ஜி., முதுநிலை படிப்பிற்கு எஸ்.சி.,–எஸ்.டி., பிரிவினர் 300 ரூபாய், பிறபிரிவினர் 600 ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பி.எச்.டி., எம்.பி.ஏ., படிப்புகளில் எஸ்.சி., பிரிவினருக்கு 500 ரூபாய், பிற பிரிவினர் 1,000 ரூபாய் நுழைவு தேர்வு கட்டணம் செலுத்த வேண்டும்.

மாற்று திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவருக்கு நுழைவு கட்டணம் இல்லை. நுழைவு தேர்வு சம்பந்தமாக சந்தேகங்களுக்கு www.pondiuni.edu.in என்ற புதுச்சேரி பல்கலைக்கழக இணையதளத்தினை பார்க்கவும்.

DINAMALAR

14 AUG 2021

PAGE 1

# அறிவியல் அறிஞர் விருது பெற்ற புல முதன்மையருக்கு பாராட்டு

**புதுச்சேரி, ஆக. 14–**

சிறந்த அறிவியல் அறிஞர் விருது பெற்ற புதுச்சேரி பல்கலைக்கழக கணித அறிவியல் துறை புல முதன்மையர் திருப்பதி ராவ் பாடியை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

வி.டி., குட் பன்னாட்டு தொழில்நுட்ப கல்வி நிறுவனம் அறிவியல், மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட துறைகளில் சிறந்து விளக்கும் பல்கலைக் கழக பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், தொழில்நுட்ப அறிஞர்களை தேர்ந்தெடுத்து ஊக்குவிக்கும் வகையில் சிறந்த அறிவியல் அறிஞர் விருதினை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது.



சிறந்த அறிவியல் அறிஞர் விருது பெற்ற புதுச்சேரி பல்கலைக்கழக கணித அறிவியல் துறை புல முதன்மையர் திருப்பதி ராவ் பாடியை துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார்.

கடந்த 2020 ம் ஆண்டிற்கான சிறந்த அறிவியல் அறிஞர் விருது, புதுச்சேரி பல்கலைக் கழக கணித அறிவியல் துறை புல முதன்மையர் திருப்பதி ராவ் பாடிக்கு அண்மையில் புதுச்சேரியில் நிறுவனம் சார்பில், வழங்கப்பட்டது.

இவ்விருது பொறியியல், அறிவியல், மருத்துவ பிரிவின் கீழ் வழங்கப்பட்டது. அவரை புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டினார். அவருக்கு பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், அதிகாரிகள் வாழ்த்து தெரிவித்தனர்.

DINAKARAN

14 AUG 2021

PAGE 4

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# மாணவர் சேர்க்கைக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு

புதுச்சேரி, ஆக. 14: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுகலை படிப்புகள், ஒருங்கிணைந்த ஐந்தாண்டு படிப்புகள், பிஎச்டி, முதுநிலை பட்டயப்படிப்புகள் உள்ளிட்ட பாடப்பிரிவுகள் உள்ளன. இப்பாடப்பிரிவுகளுக்கு ஆண்டுதோறும் நுழைவுத்தேர்வு நடத்தப்பட்டு, அதன் மூலமாக மாணவர்கள் சேர்க்கை நடத்தப்படுகிறது. இந்நிலையில் புதுவை பல்கலைக்கழகத்தில் 2021-22ம் கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கைக்கு கடந்த ஜூலை 19ம் தேதி முதல் ஆகஸ்ட் 14ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி, நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் விண்ணப்பித்து வந்தனர். ஆன்லைனில் விண்ணப்பிக்கும் தேதி இன்றுடன் நிறைவடையும் நிலையில், அதனை ஆகஸ்ட் 20ம் தேதி வரை பல்கலைக்கழக நிர்வாகம் நீட்டித்துள்ளது.

இதுதொடர்பாக புதுவை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் புதுவை பல்கலைக்கழகத்தின், 2021-22 கல்வியாண்டிற்கான பல்வேறு முதுகலை, ஒருங்கிணைந்த முதுகலை மற்றும் ஆராய்ச்சி படிப்பிற்கான சேர்க்கைக்கு இணையவழியில் விண்ணப்பிக்க ஆகஸ்ட் 20ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன படிப்பிற்கான நுழைவுத் தேர்வுகள் செப்டம்பர் 2, 3, 4 ஆகிய தேதிகளில் நடைபெறும் என கூறப்பட்டுள்ளது.